ஓலை 70 | ஓசை 191 | மே 2024

# அகர முதல இலக்கியப் பேரவை




அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

## பொருள்

இனிய சொற்கள் இன்பத்தை வழங்கும் என்பதை
உணர்ந்தவர் அதற்கு மாறாக எதற்காகக்
கடுஞ் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்?

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# ஞாலத்தைக் கற்காதார் ஞானியாவார் அம்மானை?

**பாவகை : அம்மானை**

பட்டறிவைப் பெற்றிடாமல் பாரில் உயர்வில்லை
சுட்டிடும் தீயில் சுடர்வார்யார் அம்மானை?
சுட்டிடும் தீயில் சுடர்வாரும் யாரெனிலோ
கட்டிடுவார் கோட்டையும் கற்றலினால் அம்மானை
எட்டிடுவார் ஞானம் எழிலாக அம்மானை

எண்ணம் செதுக்கி இயங்கிடும் ஆற்றலும்
திண்ணமாய் நல்லறிவை தீட்டுவார்யார் அம்மானை
திண்ணமாய் நல்லறிவை தீட்டுவார் யாரெனிலோ
உண்மை அலசி உணர்வரே அம்மானை
பண்புடை மாந்தர் பழக்கமே அம்மானை

கற்றலின் தேடல் கனிந்திடச் செய்கையில்
பெற்றிடும் பாடம் பெரிதாக்கும் அம்மானை?
பெற்றிடும் பாடம் பெரிதாக்கும் என்றெனிலோ
சுற்றிடும் சூழலை சூழந்தேதான் அம்மானை
உற்றவராய் போற்றி உரைக்கையிலே அம்மானை

முக்காலம் சொல்லும் முனியவர் ஞானியை
இக்காலம் கண்டதுண்டா ஏற்றுவார்யார் அம்மானை
இக்காலம் கூட இயம்பிடுமே யாரெனிலோ
சொக்கிடார் வாய்மொழியை சூடிடார் அம்மானை
பக்கமாய் பண்பில் படர்ந்திருப்பார் அம்மானை



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# துளிப்பாக்கள்

குப்பைகளில் மாணிக்கங்கள்,
கோபுரங்களில் செப்புக்கலசங்கள்.
"வாழ்க்கைக் கவிதை"

------------------------------------

அர்ஜூனர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை,
ஏகலைவ கைவிரல் ஏக்கங்கள்.
"இட ஒதுக்கீடு"

------------------------------------

வாசிக்கப்படவில்லை என்றாலும்
வற்றமறுக்கும் வார்த்தைகள்.
"விடியும்"

------------------------------------

எலிக்குத்தான் பிறந்ததென்றாலும்
பதினாறையுந்தாண்டி பாய்ச்சலாய்.
"மகளதிகாரம்"

------------------------------------

உரசவே இல்லை
இடி,மின்னல்,பிழை.
"காதல்"

------------------------------------

காட்டாற்று வெள்ளம்
பாவம் நதிக்கரைகள்
"எனக்கான கவிதை"




கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி,பிச்சாண்டார் கோவில்

# விடை சொல்லு காலமே

எது உண்மை?
ஏங்கும் உலகில்.
புரியாத கேள்வியில்
புரிந்ததாய் வந்தவிடையில்.
தத்தளிக்கும் இதயத்தில்
தேடிய தெளிவுகளும்.

திரும்பும் திசைகளும்
திகைக்க வைக்க.
விடியல் கதிரவனின்
விரிப்பில் மலர்ந்த.
கனவுகளின் மயக்கத்திலே
கசிந்திடுமே உண்மைகளூடே.



துயரங்களே தவழ்ந்த
தினங்ளில் மலர்ச்சியே இல்லையே.
உயர்வின் உச்சங்களுக்காய்
அயர்வை அசரவிட்டே
உணர்ச்சியின் குவியல்களோடு
தேடுவதாக வந்ததுஏது?

விடை சொல்லுகாலமே
விஞ்சிய தேடல்களுக்கே.

கவிஞர் இரஜகை நிலவன்

# மனிதனென்று

என்னோடு உறவாடிய நீங்கள்
நான் அங்கு இல்லையென்ற
கணிப்பில் உதடுகளின் வார்த்தைகளால்
என்னைத் தூற்றத் தொடங்குகிறீர்கள்.

அங்கு என் இருப்பை
உனக்குத் தெரிவிக்கும்படியான
அத்தருணத்தில்
சாட்டையால் அடிவாங்கியபடி
முகத்தை பாவமாக்கிக் கொண்டு
பேசியதை மழுப்பத் தொடங்குகிறீர்கள்.

உள்ளொன்று வைத்து
புறமொன்றுப் பேசிப் பழக்கப்பட்ட நீங்கள்
உங்களின் வசதிக்கேற்ப என்னிடம்
மன்னிப்பை எதிர் நோக்குகிறீர்கள்.



மன்னிக்க அருகதையற்ற
உங்களைப் பாவம் பார்த்து
நான் மன்னித்தப் பின்னரும்
இருக்கும் காலம்
அகஅழுக்கைக் களையாமல்
அப்படியே இருப்பீர்களேயானால் நீங்கள்
மனிதனென்று சொல்வதற்கே
தகுதியற்றவர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பூ உலகு

இரை தேடும் கொக்கு
நிழலொளி கண்டு மயங்க
காட்சிப்படுத்தும் நீரோடை!
தீரா பசி தீனி மீன்
தேடல் தீர்க்கும் தாடகம்.

கடும் வேனிற் காலம்
தீரா களைப்பில் காகம்
தாகம் தணிக்கும் புனல்!

நம்பிக்கையுடன் நகர்ந்து செல்
தடைகள் மெல்ல விலகும்
முயற்சி கண்டு.

விரல்கள் கூட்டிச் சென்றது
கடந்து போன நாள்களை
நினைவுப் படுத்தும் கை.

தேக்கம் தெளிந்து
நோக்கம் தெரிந்து
முன்னேறி செல்.

வெடிப்பு விழுந்த நிலம்
வஞ்சியர் அணிவகுப்பு
வறுமை வெல்ல பயணம்.

வண்ணத்துப்பூச்சி தீண்ட
மௌனம் கலைந்த இதழ்கள்
பூ விரிந்தது.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# தேகமும் நெருப்பானதே

கோடை வெயிலுக்கு
குளிர்ச்சியைக் கூட்டுவோம்
பகலவனும் பற்றியே
எரிகிறான் பூமியிலே

புழுக்கம் தாங்கவில்லையே
வியர்வையும் வருகிறதே
காற்றும் அனலாகிட
தேகமும் நெருப்பானதே

மரங்களை வீழ்த்தினோம்
வெந்தே வேகிறோம்
ஓலைக் குடிசையை
அறவே மறந்தோமே

எங்கும் கட்டிடம்
இரும்பெல்லாம் உள்ளேயே
தென்றலும் சுடுகிறது
தீப்பந்தமாய் ஆனதே

தொண்டைக்குழி வறண்டிடத்
தாகமும் வாட்டுதே
குளுமையானப் பானம்
தேடியே அலைகிறோமே

இளநீர் அருந்திட
இதமாய் இருந்திடுமே
பதநீரும் பாங்காய்
வெப்பத்தைத் தணித்திடுமே



நுங்கும் உடலுக்கு
குளிச்சியைத் தந்திடுமே
வெள்ளரியும் நமக்கு
ஆரோக்கியம் நல்கிடுமே

வாழைப்பழமும் திராட்சையையும்
உண்போம் இக்கணமே
செயற்கை குளிர்பானத்தை
விலக்கியே வைத்திடுவோமே

கோடை வெயிலுக்கு
குளிர்ச்சியைக் கூட்டுவோமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பிரித்துப்பார் உலகம் புரியும்

புத்தகம் நமக்கு நல்ல தோழன்
புத்துணர்வை தந்து மகிழ்வை கொடுக்கும்
நல்ல வழிக்காட்டியாய் நாளும் வரும்
நல்ல கருத்தை தந்து உதவிடும்
தலைக் குனிந்தால் தலை நிமிரும்
தலை எழுத்தை மாற்றி விடும்
சொல்லாற்றல் தந்து சொல்லாடாச் செய்யும்
உணர்வுகளோடு உயிரையும் கொடுத்து உதவிடும்
உயர்ந்த மனிதர்களையும் படிக்கச் செய்யும்
வண்ணங்களைப் பார்த்து மகிழ்வதை விட
வலிமையானச் செய்தியை திரட்டி வரும்
உலகம் எங்கும் வாழும் மனிதர்களுக்கு
உள்ளுணர்வை ஏற்படுத்தி அவர்களோடு நமக்கு
அங்கிகாரத்தை பெற வைத்து உறவாடி
மகிழ்வதோடு நின்று விடாமல் மற்றவரையும்
வாழ வைத்து அழகுப் பார்க்கும்
சிந்தனை சிறப்போடு உலா வந்து
சிந்திக்க வைக்கும் ஆயுதம் புத்தகமே



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# இறைவா

எட்டாக்கனிக்குக் கொட்டாவி விடுவதைப்போல
சில நேரங்கள் சில தருணங்கள் ஆகிடுவதுண்டு
எதிர்பார்ப்பை விளைத்து விட்டு
சிட்டென்றாய் பறந்து விடுகிறது ஆசை

எத்தனை விதத்திலும் சொல்லப்பட்ட விதிபாடோடும்
பிரார்த்தனை செய்தாலுமே ஏனோ மௌனமாகவே கிடக்கிறது
அமிலிதுமிலியாய் துள்ளாட்டம் தந்து
தள்ளாட்டம் காண்கிறது எதிர்பார்ப்பு

நினைத்த நினைவும் கேட்ட பிரார்த்தனையும்
தாமதத்தில் பொருத்தமொன்று என்றே
தானே தேற்றிட முடிகிறது
மனிதனிடம் மனதை மறைத்து விடினும்
வல்லோனிடம் மறைத்திட இயலுமோ

வசப்படுத்தித் தரவேண்டும்
வசந்தம் வீசிட நெசமாகிடதான் வேண்டும்
எண்ணம் குவிகிறது வண்மாகிடாதோ திண்ணமாகிடுதே

திரைமறைவில் மறைந்ததைப்போல எழுதிய எழுத்தையும்
சுருட்டி மடித்து ஆசைகள் குவித்ததையே களைத்துப் போட்டால்
மாறிடுமா மனதில் பதிவாகி ய எண்ணமெல்லாம்
இறையோனிடம் சேர்கிறது பிரார்த்தனை வழியிலே



உயர்ந்தேனே பறந்தோனே விழிநீரில் வலி ஏற்றி
உள்ளக்குமறலை மெல்லச்சொல்லி
இரு கைச் சேர்த்து உன்னிடம் உயர்த்தி

தஞ்சமான யாவையையுமே
கொட்டி தீர்த்து விட்டே எழுகிறேன்

பாரம் மனதை அழுத்திப் பிடிக்க அழுத்தத்தை குறைக்க
உன்னிடம் கொட்டி தீர்க்கிறேன்

வாழ்வில் விடியல் மலரும் என்று காத்திருப்போடு
தினப்பொழுதும் உன்னிடமே ஒப்படைக்கிறேன்

கவிஞர் சஹீனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# தனிமையின் பயணங்கள்

தங்கத்தில் பொதிந்த கல்லென
மிளிரும் வெளிச்சங்கள்
முக்கியமாக இருக்கின்றன.
ஒளிச்சிதறல்கள் மெய்யாகத் துலங்கி
வழிநடத்திச் செல்கிறது
நீண்ட தூரம்.

கண்ணாடியில் நீர்த்தாரைகள் வருவது போல
தயங்கித் தயங்கி சரிந்து வழிந்து
சட்டென்று ஒன்றையொன்று
பற்றிக்கொண்டு ஒன்றாவது போல்
அபாரமான உணர்வுக் கிளர்ச்சியுடன்,
தனிமைக்கும் தனிமைக்குமான தூரத்தில்
மீண்டும் மீண்டும் ஓர்மையுடன்
தன்னை உணரும் அனுபவத்தை
தரிக்க வைத்துக் கொண்டே இருக்கிறது.



தன்னிலிருந்து பிரிந்து வேறொன்றாகி
தானென உணரச் செய்யும் பயணம்
எல்லோருக்கும் வாய்ப்பதே இல்லை.

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

## 10. மந்திரம் கொடுத்த காதை :


1. மணிமேகலா தெய்வம் — புத்த பீடிகை
புத்த பாத பீடிகையால் மணிமேகலை முற்பிறப்பை அறிந்தாள்.
சத்தமின்றி மணிமேகலா தெய்வம் விண்ணிலிருந்து இறங்கியது
அத்தனை பேரும் கேட்கும்படியாக அத் தெய்வம் கூறியதாவது
ஒத்து வாழவேண்டிய மனிதர்கள் பிரிந்தே தம்மில் வாழ்கின்றனர்

அறம் கேட்கவேண்டிய காதுகள் அல்லாததை எல்லாம் கேட்கிறது.
திறமையாக நாடாளும் அரசன் காதல் பின்னே அலைகின்றான்
சிறப்பாக புத்த தேவன் தோன்றி உலகில் அன்பை போதித்தான்
முற்பிறப்பின் கணவன் இராகுலனை அறிய ஆவலாக இருக்கிறாய்



உவவனத்தில் காமத்தோடு உன் பின் சுற்றினான் உதயகுமரன்
அவனே முற்பிறப்பில் உனக்கு கணவன் அவன் இராகுலன் ஆவான்
கவனி அதனால் தான் உன் உள்ளத்தில் அவன் மீது காதல் உண்டானது
தவப் புதல்வி நீ உன்னை ஒழுங்கு படுத்தவே தீவுக்குக் கொண்டு வந்தேன்

அறத்தின் விதை நீ, வளர்ந்து தழைத்து ஆற்றவேண்டிய பணிகள் உண்டு
மறந்தும் நீ சராசரி பெண்ணாக காதல் காமம் குடும்பம் என வாழலாகாது
அறநெறிகளில் வழி நடத்தவே மணிபல்லவத் தீவுக்கு அழைத்து வந்தேன்
பற்றறற புத்தன்போல் சலனமற்ற நீர் தடாகம் போல் தெளிவாக வாழ்க



இன்னும் கேளாய் , தாரை, வீரை இருவரும் உன் தமக்கையார் ஆவர்
மன்னன் துச்சயன் இருவரையும் மணந்து கச்சயத்தை ஆண்டு வந்தான்
தன்னலமற்ற அறவணர் துச்சயன் நாட்டில் சில நாட்கள் தங்கினார்
உன்னதமான புத்தன் பாதங்களை வணங்கிச் செல்லவே வந்தார்

இங்கே குற்றங்களை அழிக்கவல்ல புத்தனின் பாதத்தாமரை உள்ளது
எங்கும் அவன் அருளும் கருணையும் பரவியிருக்கிறது உணருங்கள்
தங்கி சிலநாட்கள் புத்த அறவுரைகள் கூறிச் சென்றார் அறவணர்
மங்காத அடுத்த பிறவியே தாரை வீரை மாதவி, சுதமதி யாகும்

மணிமேகலையின் இளமை அழகால் அவளுக்கு துன்பங்கள் நேரலாம்
அணியிழையாள் தன் கோலத்தை நினைத்த உருவாக மாறலாம்
பணியின் நிமித்தம் வானத்தில் செல்லவும் மந்திரங்கள் கூறினாள்
துணிந்து செயல் படு என்று கூறிச் சென்றது மணிமேகலா தெய்வம்

செல்லும் முன் மணிமேகலை கடமை என்ன என்று உரைத்தது
அல்லும் பகலும் உழைக்கும் மனிதனின் தீராத நோய் அவன் பசி
கல்லையும் மண்ணையும் தின்று அவன் பசி ஆற்ற முடியாது
வெல்லும் மந்திரம் கூறி வானிலே எழுந்து நீங்கியது தெய்வம்

...தொடரும்

கவிஞர் ந. திருக்கோமு

# கடந்து செல்

வாழ்வில் எதற்கு
அதிக சலுகை
வழங்குகிறாயோ
அது உனக்கு எப்போதும்
அதிக சலுகை
வழங்காது

வாழ்வில் எதற்கு
அதிக முன்னுரிமை கொடுக்கிறாயோ
அது உனக்கு எப்போதும்
முன்னுரிமை தராது

வாழ்வில் உனக்கு
வேண்டப்பட்டவையெல்லாம்
உன்னைப் பெரும்பாலும்
வேண்டாது

வாழ்வில் நீ
தேடுபவை எல்லாம்
உன்னை எப்போதும்
தேடுவதில்லை

வாழ்வில் நீ விரும்பும்
யாவும் எப்போதும்
உன்னை விரும்பாது

வாழ்வில் நீ திருப்திப்படுத்தும்
எதுவும் எப்போதும் உன்னைத்
திருப்திப்படுத்த நினைக்காது.

சந்தர்ப்பங்களை
முடிவு செய்தது போல
நேர்ந்த சந்தர்ப்பங்களில்
முடிவுக்கு
வரவேண்டியதும் நீதான்!

வாழ்வின் இனிப்புகளில்
இன்பம் கமழ்வதைப்போல
கசப்பான உண்மைகளையும்
கடந்து செல்லத்தானே வேண்டும்?



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# பூமலரே!

பூமியிலே புதைந்த விதைதிண்டு,
பூரிப்போடு துளிர்விட்டு,

பூச்செடியாய் வளர்ந்திட்டு,
பூடகமாய் கிளைவிட்டு,

பூவரும்பும் மொட்டிட்டு,
பூவாய் மலர்ந்திட்டு,

பூரண நறுமணமிட்டு,
பூவிழிக்கு காட்சியிட்டு,

பூங்காவனமாய் குலுங்கிட்டு,
பூந்தோட்டமாய் ஆக்கிட்டு,

பூங்கரங்களால் பறிக்கப்பட்டு,
பூஞ்சரத்திலே சில புகுந்திட்டு,

பூமகள் கேசமதில் சில சேர்ந்திட்டு,
பூஜையிலே சில அர்ச்சிக்கப்பட்டு,

பூவலங்காரமாய் சில பயன்பட்டு,
பூத உடல் பிரிந்த பின் போடப்பட்டு,

பூஞ்சையான நோய்க்குமே எதிராக நின்றிட்டு,
பூமியிலே மறுபடியும் உயிர்விடும் பூமலரே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# கொடுமையை எதிர்த்து நில்



பிறப்பால் ஏற்றத்தாழ்வு
பிறழும் எண்ணங்கள்.
பணத்தால் உயர்வு
பரிகசிக்கும் மனம்.

உழைக்காமல் பிறர்
உழைப்பைச் சுரண்டல்.
தானெனும் மமதை
தலைக்கனம் ஆவது.

இயற்கை எவர்க்கும்
இன்பத்தைக் கொடுக்க
மனிதன் மட்டும்
மனதில் வஞ்சனையாய்

உள்ளம் வெம்ப
உதடு புன்னகைக்கும்.
தன்னலத்தைப் பேணி
தடைகளை உருவாக்கல்.

இருப்பதைப் புதையலாக்கி
இரப்போரை இகழ்தல்.
பணத்தைத் தேடி
பம்பரமாய்ச் சுழல்தல்.

பாசத்தை மறந்து
பகையைத் தேடல்.
போதையில் மயங்கி
பேதையாய்த் திரிதல்

கடமையைச் செய்திடக்
கையூட்டு பெறுதல்.
எளிமையாய் வாழாது
ஏக்கமே வாழ்க்கையாய்.

வம்பு செய்வோரிடம்
வணங்கிப் போதல்.
பயந்தது போதும்
பொங்கி எழுவீர்.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

அகர முதல

# கேதமிருள்

மதியில்லா கதியோடு
விதியில்லா நதியானேன்
மீன்களை தொலைத்து
கொக்குகளை விரட்டி

திசையறியா நசையால்
விசையறியா வசை - என்னை
அணை கொண்டு மறிக்க
கனை கொண்டு தரித்தேன்

குருடின் குளிர்மையும்
செவிடின் செழுமையும்
ஊமையின் உன்னதத்தையும்
உணர்ந்தேன்.

வஞ்சனையின் மஞ்சனை
கஞ்சமில்லாமல் மேலோங்க
கேளன் கேளாராக

அணந்த அணங்காய்
அணை தகர்த்தேன்
எத்தனின் எத்துதத்தால்
கேதமிருளில் உறைந்தேன்.



கவிஞர் ஷேபா அமீனுதீன், சம்மாந்துறை

# சுற்றுச்சூழல் மாசுபாடு

தும்பிக்கும் தும்மல்வரும்
தூய பூமிமாசுபட்டால்
ஞாலமும் ஞாயிறாகும்
வெப்பமதுஅதிகரித்தால்.

வெள்ளப்பெருக்கெடுத்து
வீட்டுக்குள் வந்தே
நதியின் கைகளும்
நம்மை தண்டிக்கும்

மாற்று நிலம்தேடி
மார்ஸ்வரைச்சென்றாலும்
மாசுபாட்டைத் தடுக்காமல்
மனிதனுக்குவாழ்வேது?

சுழலும்பூமிதனை
சுற்றத்தோடு காப்போம்
சுற்றுசூழல்மேம்பட்டு
சுகமாக வாழ்வோம்



கவிஞர் வி. பிரியதர்ஷினி, குலசேகரபுறம்

# ஊமை

உயிர் ஊட்டும் வார்த்தைகள் எல்லாம்
இன்று ஊமையாகி விட்டது
சிலர் செய்த மாற்றத்தில்
தைரியமும் ஊமையாகி விட்டது
தப்பை தட்டிக் கேட்காமல்
மனிதனும் ஊமையாகி விட்டான்
அவன் குறையை பார்க்காமல்
பட்டமும் பதவியும் வந்து விட்டது
தகுதியும் அறிவும் எங்கே என்று
தெரியாமல் கல்வியும் திறமையும்
ஊமையாகி விட்டது
பணம் எனும் அதிகாரதுக்கு முன்
பேனாவும் மையும்
உண்மையை பேசுகிறதே
ஊமை மொழியாய்



கவிஞர் சுபியா பானு, இலங்கை

# கவியழகி

பாசத்தின் தாயாக நேசத்தை பிரசவித்தவளே
முகம் காணாது அகம் கொண்டு
எதுகையின் தேடலில் பொதிகையில் பூத்தவளே

வஞ்சியின் நெஞ்சமதில் நஞ்சான வஞ்சமில்லை
எழுத்தன்றி நம்மில் எந்த தேவையுமில்லை
பழகிய சில நொடியில்
இத்தனை நாள் எங்கிருந்தாயென எண்ணவைத்தாய்

நல்நட்பான உன்நட்பை வரமென மாற்றிவிட்டாய்
கலங்கிய கண்ணெல்லாம் கண்ணீரான என்னில்
கன்னம் துடைக்க நெஞ்சில் நிறைந்தாய்

இடைவிடா தொடற்கொடியாய் மலர்ந்த மலர்க்கொடியே
அடர்க்கொடியாய் உன்னை தொடர்ந்து நிற்பேனே

காலம் வகுத்த பாடத்தில்
காலனைக்கடந்த கலைவண்ணமே
என் வரிச்சரித்திரத்தின் ஒளிச்சித்திரம் நீயே

பாரின் பார்வைக்கு என்றும் அச்சமில்லை
பார்க்கும் உனக்கு பாசம் புரிந்தபின்னே

எதிர்ப்பார்ப்பற்ற நட்போடு நாடி நிற்போம்
நிலையாக எழுத்துலகில் கவிமான்களாக.



கவிஞர் ஷியாஸ்னா பைஸல், இலங்கை

# இளமையில் ஒரு நட்பு

மேலான ஊராம் ; பார்போற்றும் ஊராம்
முப்புறம் நீரோடு ஒரு புறம் நிலமனைய
முப்போகம் காணாவிடினும் - இருபோகம்
தப்பாமல் காண்பிக்கும் ஊராம்.

நாகரிக வளர்ச்சி மெதுவாக முகம் பார்க்கும் சமயம்
முதல் தலைமுறை மாணவர் படை
இருந்ததே ஓங்கி உயர்ந்த ஒரு தனியார் பள்ளி
எவ்வளவு செலவானாலும் சரி என்பிள்ளை பயிலட்டும்
என் துயில் கெட்டுப் போகட்டும்.

துளிர்த்தது ஒரு நட்பு அங்கே
நான்கு வயதில் காதல் வருமா?
அது நட்பென்னும் பெயரில் அழகாய் வரும்.
தரளமும் பரிதியும் நாமமாம்
இணைந்தே எங்கும் காணலாம்
உதித்ததே சகோதரப் பாசம்தான்.
நீயின்றி நானில்லை ; நானின்றி நீயில்லை

கீரியின் கண் பட்டதோ ?
அரவம் வந்து பறித்து விட்டதே
பரிதியின் உயிர்தன்னை
தரளம் தான் என்ன செய்யும் ?
வயதோ நான்கு - அதிகமாக
அழ முடியுமா ?
அதைத் தான் செய்தேன் நானும்.

இளம்வயது நண்பா! இருபத்து ஆண்டுகள் ஆனாலும்
உன் புன்னகை முகம் மறவாமல் இருக்கிறேன்.
மறு உருவில் என் முகம் காண வருவாயா?



கவிஞர் சி. வே. முத்துச்செழியன் (எ) மு. வேதப்பிரிசி, மதுரை

# அவளுக்கு திருமணமாம்

அவள் விவாகம் செய்யப் போகிறாள்
அவள் வாழ்வு மாறப்போகிறது
அவளோடு ஓர் உறவு இணையப் போகிறது
அந்த ஒரு உறவிற்காக அவள் இதயம்
துடிக்க தயாராகிறது.

அவனுக்காக எதையும் இழக்க
அவள் முன் வருகிறாள்
குடும்பத்தை இழக்கிறாள்
உறவுகளை குறைக்கிறாள்
கனவுகளை கலைக்கிறாள்
வெறுப்புகளை விரும்புகிறாள்
விருப்புகளை வெறுக்கிறாள்
ஆசைகளை மறைக்கிறாள்
அன்பை விதைக்கிறாள்.

அவனுக்காக அவள் மாறுகிறாள்
முழுதாய் தன்னை மாற்றுகிறாள்
அவள் வாழ்வில் அவளாக அவள்
வாழ்ந்தவள் விவாகத்தின் பின்
அவள் வாழ்வில் அவள்
யாரோ போல மாறுகிறாள்.

அவள் தோழமைகளை குறைக்கிறாள்
அவள் தேவைகளை புதைக்கிறாள்
அவள் நிம்மதியை தொலைக்கிறாள்
அவள் கண்ணீரை கூட ஒழிக்கிறாள்
அவள் வார்த்தைகளையும்
மரணிக்க செய்கிறாள்
அவளாக அவள் இல்லை என்றாலும்
அவனுக்காக அவள் வாழ்கிறாள்.



அடுத்து ஒரு உண்மையை
சொல்லியாக வேண்டும்
ஒருவேளை அவளுக்காக வாழும்
ஒரு ஆண் மகனை அவள்
விவாகம் செய்துவிட்டால்
மேற்கூறிய வரிகள் யாவும்
அவளுக்கு சொந்தமில்லை.

கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் இலங்கை

# அவள்தான் கற்றுக்கொடுத்தாள்

நான் கன்னம் சிவந்து வெட்கப்படவும்
அவள்தான் எனக்கு கற்றுக்கொடுத்தாள்
அன்பின் பாலம் உடைபட்டு
பிரிவின் கனத்த துயரில்
இயல்பாய் எப்படி கடந்து செல்வதென்றும்
அவள்தான் எனக்கு கற்றுக்கொடுத்தாள்.

இப்போது நான் அவளை
என்னவென்று அழைப்பது?



கவிஞர் சி. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# பிம்பம்

உடைந்து போன ஆடியிலே தெரியும்
ஆயிரம் பிம்பங்கள்!
சிதறிப்போன என் மனது அது!
வாழ்வின் தேடல்கள்
விடை தெரியா விடுகதை அல்ல!
தன்னம்பிக்கை விரல் பிடித்து
மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும்
பீனிக்ஸ் பறவை!
உளி கொண்டு பாறையில் செதுக்கிய
பிம்பம் நான்!
நீரிலே தெரியும் பிம்பமல்ல
கல்வீசி கலைத்திட!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# ஆகாயம் தொடும் பந்து

காற்று வாங்கி மேட்டிலேறி மேலே போகலாம் - பந்து.
கனவுகளை கண்ணகள் தாங்கி தூக்கம் போகலாம் - நொந்து.
கால்லடிகள் பட்டபோதும் காயம் ஆறலாம் - சிலர்.
சொல்லடிகள் தந்த காயம் மாறிப் போகுமா.
பாரமற்ற வளியைச் சேர்ந்தால் வானம் போகுமே - பந்து.
படிந்தவர்கள் வழியைச் சார்ந்தால் வாழ்ந்து போகலாம். நீயும்.
நீருக்குள்ளே முழ்கினாலும் மிதந்து போகுமே - பந்து.
சிறியோரை சேரும்போது நீங்கிப்போக வேண்டும் - என்று.
வாழ்ந்து போன பெரியோர்கள் வரைந்த வாக்கியம்.
பந்துபோல பதுக்கி வைத்தால் மிதிக்கக் கூடுமே - உலகம்.
புள்ளாங்குழலாய் பகிர்ந்தளித்தால் மதிக்கக் கூடுமே - வாழும்.
வாழ்க்கையிலும் இன்பம் வந்து கதவைத் தட்டுமே.
காட்டு மூங்கிலின் காதுக்குள்ளே செல்லும் இரகசியம் - அது.
கானம் பாடி ஊருக்கெல்லாம் உரைத்துப் போகுமே - பந்து.
அடித்த போதும் மிதித்த போதும் கட்டிக் காக்குமே - இதை.
உணர்ந்து கொண்டாள் உனக்குக் கூட உண்மை விளங்குமே.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு, இலங்கை

# தனித்த நான்

தனித்திருக்கிறேன்.

சிரிக்கையில் உடன் யாருமின்றி
அழுதால் ஆறுதலுக்கும் யாருமின்றி
இது தான் என் வலியென
சொல்ல யாருமின்றி.

ஏனோ புலம்பிட பிம்பம் தேடி
இரசிக்க பிறை தேடி
பிடிப்பில் ஏதுமின்றி தனித்து நிற்கிறேன்

கதவோரமாய் வெறித்த பார்வையில்
மென் காற்றின் சிகை வருட
உணர்கிறேன் தனித்த எனை.



இரு பாதங்களோடு.
இணையா பாதங்களை
இணைத்தே இன்றும் இணைக்க
இறுக்கி பிடித்த நான்.

சற்று இளைப்பாற
இடம் பெயர்ந்தேனோ.
இருக்கும் குடில் ஒன்றே
பருகும் நீரும் ஒன்றே

அருந்தும் உணவும் ஒன்றே
அலைமோதும் மனத்தில் மட்டும்
வெகு தொலைவில்.

தனித்து தான் இருக்கிறேன்.
சில திங்களாக.

கவிஞர் சீ. கீர்த்திகா, பழநி

# பறவையின் நிழல்

நீண்ட தினங்களுக்குப் பிறகு
வனத்தில் நுழைந்த
பறவை நோக்குபவனை
வரவேற்கிறது பேரமைதி
வளியின் வேகம் நின்றதென
அமைதி காக்கின்றன
இலையும் கிளையும்.
கீச்சொலிகளும் உறுமல்களும்
கேளாது பேரச்சமூட்டுகிறது காடு.
சருகுகளையும் நகர விடாது
காலடிக்குள்
கிடத்திக் கொள்கிறது மரம்.
கடந்து போகாத வழித்தடங்களில்
காலடித் தடங்கள் காணாது
கலக்கமடைகிறது மனம்
ஆகாயப் பாலத்தில்
வெளியை அளக்கும்
புள்ளினங்கள் இல்லாது
வெறுமையில் விசும்புகிறது வனம்
கண்ணீரைப் பொழிய மறுத்து
மேகத்தைக் கரைத்து விடுகிறது வானம்.
வண்ணங்கள் தொலைத்த வானவில்லென
நிறமற்றுத் திரியும் தடங்களில்
தேடத் தொடங்குகிறான்
பறவையின் நிழலை.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# நானெனும் போர்வை

நான் யாரென பிம்பத்தை
பார்த்தும் கேட்டும்
ஐவிரல்களை நுழைத்தென்னை
வெளியிழுத்து
பார்த்தும் என் சாயல் புலப்படவில்லை

சதைகளை போர்த்திட்ட
தோல் சாயங்களின் நிறங்களை
நானே வெளிக்கொணர்ந்து
மார்சாய்த்து மடிசாய்த்து
சாயலை பரிபூரணிக்கிறேன்



ஆனாலும் சாயலின் முழுமை
என்னை திருப்திபடுத்தவில்லை
நெற்றி முதல் பாதம்வரை
கிழித்தெனது பிம்பத்தை
தனியே நிறுத்தி
இன்றும் என்னை பார்த்தே நகர்கிறேன்

ஆராக்களை களைந்துண்டு
தனித்தனியே புள்ளிகளமைத்து
கண்களை உருட்டி
சதைகளை கூறாக்கி
கோடுகளை நேர்படுத்தி
குருதி படிவில் பாதம் பதிக்கிறேன்
எனது என்னைப் பிரித்து
தோல்மீதேற்றி கசிகிறேன்
செங்குளிரைப் போர்த்தியபடி.

துடித்துக்கொண்டிருக்கும் இதயமும்
நினைத்துக் கொண்டிருக்கும் மூளையும்தான்
இங்கே பிரிக்க முடியாததாகிறது

கவிஞர் சே கார்கவி கார்த்திக், நாகப்பட்டினம்

# முன்னேற்றப் பாதையில்

பெரிதினும் பெரிது கேட்போம்
உழைப்பில் உறுதி கொள்வோம் உன்னதமே
நம் எண்ணம் எதுவோ அதுவாகவே ஆகிறோம்
நம்மை வெல்ல யாரும் இல்லை
வெற்றிகள் நம் வியர்வையின் வெகுமதி
தோல்விகள் கூட வெற்றிக்கு முதல் படி
கலாமின் கனவுகளில் விரியும்
அக்கினிச் சிறகுகளைத்
தொலைத்து விடாதீர்கள்
தொலைபேசிகளுக்கு உள்ளே
வாழ்வின் லட்சிய சாதனைகள்
உறங்கிக் கிடக்க
ரசிகர் மன்றங்கள் செய்வது என்ன?
நம்மை உணர்ந்து உண்மை அறிந்து
சிகரங்கள் தொடுவோம்
பயணங்கள் தொடர்வோம்.
முன்னேற்றப் பாதையில்!



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# என்னோடு பேசிவிடு

என்னோடு பேசி விடு எனக்காக பேசி விடு
உனக்கான பல மணி நேரத்தில்
எனக்காகவும் சில நிமிடங்கள் ஒதுக்கி விடு

உனக்கு தொல்லை தர நினைக்கவில்லை
உன்னை விட்டு தூரமாய் போகவும் முடியவில்லை

நீ தந்த அழகிய நினைவுகள் இருக்கையில்
நிம்மதியாய் உறங்கவும் முடியவில்லை

அன்றிலிருந்து இன்று வரை உனக்காகவே
அதிகமாய் எழுதுகிறேன்
ஆழ்மனதில் உள்ளதை மட்டுமே எழுதுகிறேன்

வந்து விழும் உனது செய்திக்காய்
என் தொலைபேசியும் தவம் கிடக்கிறது
உன்னை அடிக்கடி வர்ணிக்கும் எனது விழிகளும்
உனது நலனை படித்திட ஆவலாய் இருக்கிறது



தேவைக்காக பழகும் உறவுகள் மத்தியில்
உன் வாழ்க்கை ஒன்றே போதும் என்று
பழகும் அன்பு பெரிதுதானே

எனக்கு கவலை இல்லை
கையடுத்து கும்பிட்டும் கேட்கவில்லை

மனதில் உள்ள உண்மையான அன்போடு
உரிமையாய் கேட்கிறேன்
எனக்காக சில நிமிடங்கள் ஒதுக்கி விடலாமே.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# தாலாட்டு

ஆராராரோ.. ஆரிராரோ...
அன்புச் செல்லம் தாலேலோ...
ஆராரோ... ஆரிராரோ..
அன்னக்கொடி தாலேலோ

தூளி கட்ட வேணும்னு
வேப்ப மரம் நட்டு வச்சேன்
தொட்டில் செய்ய வேணும்னு
தேக்கு மரம் நட்டு வச்சேன் (ஆராரோ

பஞ்சு மெத்தை வேணும்னு
பருத்திச் செடி நட்டு வச்சேன்
நோய் இல்லாம வாழணும்னு
துளசிச் செடி நட்டு வச்சேன்

வேங்கை மர பிசினெடுத்து
கண்ணுமை செஞ்சு வச்சேன்
மஞ்சக் கெழங்கு அவிச்சு
பூசு மஞ்சள் அரைச்சு வச்சேன் (ஆராரோ

நல்லமுது தான் ஊட்ட
பால்சங்கு வாங்கி வச்சேன்
வேர்வை போக வேணும்னு
பனையோலை விசிறி செஞ்சேன்

என்னை பெத்த ஐயா
ஏன் இப்படி அழுவுறீங்க
என்ன வேணும் சொல்லுங்க
நொடியிலே கொண்டு வாரேங்க (ஆராரோ



கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ், பட்டாபிராம் (சென்னை)

# பேரன்பு

உள்ளத்தால் நீ
நொந்துடைந்து போகையில்
வந்தணைத்துக் கொள்ளும்
தாயன்பு!

வலிகளால் நீ வலுவிழந்திட
அமுதென வார்த்தைகளை மருந்தாக்கிடும்
அமுதன்பு!

பொய்யன்பில் நீ
மெய் தளர்ந்திட
மெய்யுணர்த்தி வாழ்த்தும்
மெய்யன்பே
அவளன்பு!

காலத்தால் யாவும்
கடந்து போய்விட
நின் கவலை போக்கும்
அவள் கனிவன்பு.

சுயநல உலகில்
சுகதேகியாய் நீ வாழ்தலே
பேருவகையென வாழும்
அவள் பேரன்பு.

ஆழ் மனது வேதனைகளை
அவளிடம் பகிர்ந்திட
இனியில்லை எனும்போது
இதயம் தேடிடும்
இறையன்பு.



இம்மையில்
இனிதாகும் தாயன்பு
ஈரலுகிலும் இனியோர்
அன்பென்றாலே
அது இறையன்பு.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்பளை

# நினைவு

ஆயிரம் காரணம் சொல்லி ஒரு உறவு பிரிகிறது
நினைவுகளால் நாட்கள் தொடர்கிறது
அங்கு வந்து நிற்கின்றது நினைவு என்ற ஒன்று

பார்த்துக் கூட பேசி இருக்காது ஒரு உறவில்
அருகில் கூட இல்லாத நாட்களில்
குறுஞ்செய்திகள் ஆக அனுப்பிய நாளோ

இவ்வளவும் சேமிப்பாக
நினைவில் வந்து மறக்க முடியாத
நினைவுகளை சேர்த்து விடுகிறது
நினைவாக அழியாத நினைவாக.

அழகிய ஒன்று நினைவு
அதைத் தொலைக்க நினைக்காதே
தொலைக்க நினைத்தாய்
மீண்டும் உருவாகாதே நினைவு.



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

# கடவுளின் கொடை

நாம் புன்னகை
மறுக்கும்
ஒவ்வொரு தருணமும்
தற்கொலைக்கு
முயலுகின்றன

நித்தம் நித்தம்
ஆயிரம் மழைத்துளிகளோடு
தேநீர் ததும்பும்
கோப்பை
உங்கள் கைகளில்

காலம் சேகரிப்பதல்ல
செலவழிப்பது
வடிகால்களின்
கரைசல்களில்
கரைந்து கொண்டே
காணாமல் போவது

பிம்பம்
மங்கலாகும் முன்
கண்ணாடியை போல
எண்ணங்களும்
தூய்மையாகட்டும்



பணிந்து
மண்ணுக்கடியில்
தலை வணங்கும்
வேர்களால்
பூமி பூக்காடாகிறது

நதியின்
இன்சொல் ஓசை
பூமிக்கான
சங்கீதத்தின்
சந்தம் சொல்கிறது

கடவுள்
கொடுத்த அனைத்தும்
மகத்துவத்தின் உச்சம்
கொண்டாடி
பண்டிகையாக்குங்கள்

நேர்மையான
மகிழ்ச்சிகளின்
நெகிழ்ச்சிகளில்
குணம் விழிக்கட்டும்
மனம் சிரிக்கட்டும்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தொலைத்த மனம்; தொலைந்த காதல்

வென்ற காதல் கடந்து செல்கிறது
தோற்ற காதல் தொடர்கின்றது
பழகிய நாட்களின் பசுமைகளை
நினைவுகளுடனே நீந்தியபடி.

உன் நிச்சயம் குறித்த தினத்தில்
நாம் பிரிந்து விடுவோம் என
சொல்லி நகர்ந்த கணம் முதல்
மனம் அங்கேயே நிற்கிறது
பொய்யாய் கடந்து சென்ற
மெய் திரும்பி விடாதா என்றே.

திருவிழா கூட்டத்தில் உன்னைக் கண்டு
எதிர்கொள்ள மனமின்றி மறைந்த வேளை
என் பெயர் சொல்லி குழந்தையை கூப்பிட
சற்று திரும்பிப் பார்த்து நீ சென்ற தருணம்
மரிக்கின்றவரை மறக்காது மனதில்.

தொலைந்ததெல்லாம் தேடி எடுத்தும்
தொலைத்த காதலை தேடாமல்
கசங்கிய காகிதக் கோடுகளாய்
மருங்கி கிடக்கிறது மனம்.

உன்னில் நானும் என்னில் நீயும்
தொலைத்த இதயங்களை வேறு எங்கோ
தேடிக் கொண்டிருக்கிறோம் பொய்யாய்.



கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# அழகிய பேரலையடி நீ

மௌனம் நிரம்பிய
மனதும் எதிர்ப்பார்ப்பில்
தவிப்பை தேக்கி
கலைத்து கலக்கும்
கண்ணின் கலந்துரையாடலில்
கலகலத்துப் போனது மௌனமும்

ஈரக்காற்றின் போக்கில்
தாவிடும் எண்ணங்களின்
ஓசைக்குள் நுழையும்
உன் நிழலின் தொடுகையில்
சிலிர்ப்பும் சிலிர்த்திடும்

பிணைந்த கைகள் பேசும்
மொழி உணர்வது
அந்த காதலின் ரகசியம்
எத்துனை சேதிகளை
கடத்தித் தொலைகிறது

இளைத்திடாத இன்பத்தின்
வாசனைகள் நிரம்பிடும்
புதுவசந்தத்தின் ஜாலங்கள்

கற்பனையில்லை கனவுமில்லை
அவன்(ள்) கைப்பிடிக்குள்
துடிக்கும் இதயங்களின்
உணர்வுகளின் தடங்கள்
வியப்பின் உச்சம்
பரிமாற்றமத்தை உணர்ந்த
உள்ளங்களுக்கு பேச மொழி
வேண்டுமோ

அழகிய பேரலைகளே
அசந்திடும் பிணைப்பு



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகை மாவட்டம்

# நிழலின் நிழல்

கேட்டு சிலதும் கேட்காமல் பலதும்
கண்ணுக்குள் காத்திருக்கு

காலம் சொல்லும் தேதியில்
காற்றில் வரவும் கேட்டிருக்கு

தொட்டுத் தொட்டு சொன்னதுவோ
சேதியொன்று செவியுரசி

தாளாத ஏதோவொன்று
தரைவழியே விரல் கோலத்தில்

தப்பிப் பிழைத்தது இவளறியாதது
தன்னில் கண்டதும் மொழியறியாது

தோள் மீதமர்ந்த பட்டாம்பூச்சியின்
நிழலோடு நிழலின் தடம் பதிக்கும்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# போதும் நிறுத்து

பொல்லாத உலகம்
பொறாமையில் தள்ளும்.
பொய்யான முகத்திரையில்
பொன்னாய் மின்னும்.
உள்ளொன்று வைத்தே
புறமொன்று பேசி நகைக்கும்.
நல்லவர் போல் நடிக்கும்
நயவஞ்சகம் மறைக்கும்.
விந்தையான உலகம்
வீழ்த்தவே காத்திருக்கும்
விழும் முன் எழுந்து நில்
போதும் நிறுத்து இனி,
இயந்திரம் போல் உழைக்க நீ
ஒன்றும் அடிமையில்லை.
விளக்கின் ஒளியில் மடியும்
விட்டில் பூச்சியும் இல்லை.
விண்ணில் தெரியும் நட்சத்திரமாக
உயர்ந்து ஒளி வீசு.
சொம்பலை புறந்தள்ளி புகழ் சேர்.
வீரத்தை கையில் ஏந்தி
வெற்றியை மனதில் நிறுத்தி
விவேகத்தை செயலில் காட்டு.
உழைப்பின் அருமையை
உயர்வாய் எண்ணி உறுதிகொள்.
சுட்டெரிக்கும் பார்வையால்
சுயத்தை நிலை நிறுத்து.
புன்னகையுடன் புரட்சி செய்
வெற்றி உன் பக்கம்
புது வாழ்வு மலரும்
புது விடியலும் உனக்காகும்.



கவிஞர் குணசுந்தரி சிவா காஞ்சிபுரம்

# தமிழனின் கொடை

தமிழரின் பண்பாடு கொடுத்து மகிழ்வது
கடை ஏழு வள்ளல்களின் கொடை உணர்த்தும் நாடு

மகிழ்வித்து மகிழ்வதில் தமிழனுக்கு ஏது ஈடு
அவ்வைக்கு நெல்லிக்கனி
அதியமான் கொடுத்து தமிழ் வளர்த்த நாடு

வந்தாரை வாழவைத்து வளம் கொடுத்த நாடு
இலக்கண இலக்கியங்கள் தமிழை போல ஏது

உலகமே பொது மறையாய் கொண்டாடும்
திருக்குறள் தெய்வப்புலவன் திருவள்ளுவரின் கொடை




தமிழ் வேறு கொடை வேறு பிரிக்காத பாங்கு
அதுவே தமிழனின் உயிரான நிலைப்பாடு

உயிர்மையை போற்றும் உன்னத நிலைப்பாடு
தமிழனோடு பிறந்த தலையாயப் பண்பு

கம்பனின் கொடை ராமாயண பொக்கிஷம்
மனித மேன்மையை உலகம் போற்றும் அற்புத காவியம்

ஆயிரம் பொக்கிஷ இலக்கிய கொடை
தமிழுக்கே சொந்தம் தமிழனுக்கே சொந்தம்

கவிஞர் ஜேப்பி. பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# முறிந்திடுமோ நட்பு

யாண்டு இரண்டு
கடந்த போதும்
இடைப்பட்ட நட்பு
கடைப்பட்டதேன்

அர்த்தமுள்ள விவாதங்கள்
ஆயிரம் கடந்த பின்னும்
அர்த்தமற்ற சொற்களுக்காய் - நட்பு
அர்த்தமற்று போய்விடுமோ

குரல் மட்டுமே ஒலித்து
மனதில் ஆழ பதித்து
ஒன்று கூடி
கலந்துரையாடி
ஒரே குடும்பம் என்று
உறுதி கொண்ட பிறகு
தனித்து விடப்படுவதற்கு
வெறும் சொற்கள்
மட்டும்தான் காரணமா?

உரசல் இல்லாத
இலைகள் இல்லை
விரிசல் இல்லாத
நிலங்கள் இல்லை
அன்பென்ற மழையை - யாரும்
புறக்கணிப்பதில்லை
என்றாலும் சிலர்




என்று யாரையும்
அடைத்து வைக்க
மனம் விரும்பவில்லை

வாதங்கள் தான்
முரண்பட்டு நிற்கின்றன
மனம் இன்னும் பசுமையாக

கவிஞர் ஸ்ரீ முத்துராசன், அரியலூர்

# இதயம் ஏனோ வலிக்கிறது?



நித்தமும் நீயென்னில்
நின்றுதானே சிதைக்கிறாய்
தழும்பினைத் தந்துமேன்
தனிமையில் வதைக்கிறாய்

நித்திரையும் போக்கி
நிம்மதி கெடுக்கிறாய்
சொத்தென நினைத்திட
சோகத்தை வார்க்கிறாய்

பற்றோடு கொடியாகிப்
பாசத்தில் இருந்தாய்
சற்றும் எதிர்பாராது
சமுத்திரத்தில் தள்ளுகிறாய்

நேசங்களைப் பொய்யாக்கி
நேர்மையைப் புதைக்கிறாய்
வேசமாய் நடித்து
வேரறுத்துச் சாய்க்கிறாய்

நெஞ்சத்தைக் கொளுத்தி
நெருப்பாய் எறிக்கிறாய்
வஞ்சத்தில் தள்ளி
வடுக்களைப் பதிக்கிறாய்

உயிரை துச்சமாய்
உயிரற்று நடத்துகிறாய்
கயிரால் இறுக்கி
கதற வைக்கிறாய்

காதலைக் கொட்டி
கரைத்துச் செல்கிறாய்
சாதலைத் தூண்டி
சந்தோசம் காண்கிறாய்

இதயம் ஏனோ
இப்போதும் வலிக்கிறது
உதயம் காணவே
உன்னையே நினைக்கிறது

கவிஞர் கிருஷ் அபி

# உழைப்பே உயர்வு

உழைக்காமல் காலத்தை தள்ளுபவர் பலர் உண்டு.
உழைப்பே காலத்தை நேசிப்பவர் பலரும் உண்டு.

மெரினா கடற்கரையில்
உழைப்பாளர்கள் சிலை உழைப்பின் அடையாளமே
1930 ஆம் ஆண்டு இச்சிலை வைத்ததாக சொல்லப்படுகிறது.

குன்றி தின்றால் குன்றும் மாலும்.
ஏழு தலைமுறைக்கு சொத்து வைத்திருப்பவர்களும் உண்டு.
ஏழு தலைமுறைக்கும் அருள் சேர்த்திருப்பவர்களும் உண்டு.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.
அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்பது பழமொழி.
முதன் முதலாக இங்கிலாந்தில்தான்
உழைப்பாளர்கள் தினம் உருவானதாக சொல்லப்படுகிறது.

10 முதல் 15 மணி வரை உழைத்தாக வேண்டும் என்ற கட்டாயம்.
அதை எதிர்த்து தினம் 8 மணி நேரம் மட்டுமே உழைக்க வேண்டும்
என்ற நியதியில் கடைபிடிக்கப்பட்டது .
உழைப்பின் மகிமைக்கு ஒரு கதை உண்டு

தினமும் கூலி வேலை செய்யும் ஒருவன்
தன் நண்பனுடன் பேசிக் கொண்டிருந்தான்.
என் வருவாயில் ஒரு பங்கு குடும்பத்தாருக்கும் ஒரு பங்கு.
எளியவர்களுக்கும், ஒரு பங்கு சிறுசேமிப்புக்கும், ஒரு பங்கு
என்னை படைத்த ஆண்டவனுக்கும் கொடுக்கிறேன்
இதில் நான் மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன் .

இவனுக்கு சம்பளம் கொடுக்கின்ற முதலாளி
இந்த உரையாடலை கேட்டானாம்.
இவனுக்கு மனநிறைவைத் தருவது
இவன் உழைப்பால் வந்த உயர்வே!

தானும் மகிழ்ச்சியுடன் வாழ
இவனிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தானாம்.



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# காத்திட மறவாதே

காதல் என்று
காதில் கேட்டதும்
காத்த பெற்றோரை
காலால் உதித்திடும் சமூகமே
காணாத ஒன்றாய் மொய்த்திட
காமத்தவர் என்ன செய்தாரோ?

குருதி குடித்ததும்
குடக்கால் தவழ்ந்ததும்
குன்று ஏறிய நினைவானதோ?
குஞ்சரம் பாகனை மிதித்தாற் போல்
குஞ்சோ கூடு துறந்து
குச்சிதம் தந்து நெஞ்சில் மிதிக்கிறது - இதுவோ

அஞ்சுகமாய் பாலூட்டி வளர்த்தது
அஞ்சை பழம் கொடுத்து வளர்த்தது
அஞ்சாதமாய் ஓடிவிட்டதாம் என்று
ஊரெங்கும் அஞ்சனி எரிவது போல பரவிடும்
அஞ்சரை கோடியோடு பெற்றதற்காய் வருந்தி வாழ்வர்
அஞ்சன உலகமாய் நித்தம்
இழுக்கு வந்து சூழ்ந்திடும்

எதுவும் இல்லாமல் வந்த
எமக்கு எல்லாமாக இருந்து
எல்லாவற்றையும் தந்து
எனக்கு என்பதை மறந்து
எப்பொழ்தும் எமக்காக வாழ்வது பெற்றோரே

தன்னலம் மறந்து
எம் நலம் பார்க்கும்
எம் தந்தையும் தாயும்
நன்னலம் பெற்று
நல்வாழ்வு வாழ
நல்லாசி கேட்டு வேண்டிடுவோம்!



கவிஞர் ஷேபா அமீனுத்தீன், சம்மாந்துறை

# மாலவனும் வைணவமும்

## பகுதி 32 ஆண்டாள் — தொடர்ச்சி 2



ஆழ்வார்கள் பன்னிருவர்! மாதொருத்தி ஆண்டாளே!
வில்லிபுத்தூர் பெருமாள்மேல் ஆழ்பக்தி! அரங்கர்மேல்
உளமீர்ப்பு! இல்லறத்து வாழ்வின்பின் பூதேரி
அவதாரம்! இந்துமதம் வைணவத்துப் பரம்பரையே!
காலமது நூற்றாண்டில் ஏழென்றும் எட்டென்றும்
சாற்றுவரே! மார்கழியின் பிரம்மப்பேர் முகூர்த்தத்து
நளிர்பனியில் தண்ணீரில் நீராடி மாதமெலாம்
திருப்பாவை ஓதுவரே! வில்லிபுத்தூர் துழாயடியில்
மதலையாய் தோன்றினளே நம்ஆண்டாள்! திருவரங்கர்
ரங்கநாதர் தம்மோடு நேரிணைந்தார்! தாயாராய்
தானுயர்ந்து தெய்வநிலை உற்றனளே! ஆசார்ய
மரியாதை உற்றவரே! அவதாரச் சொல்வழக்கு
வேதகாலம் கண்டதில்லை! பின்னமைந்த புராணகாலம்
கண்டதிது! ? சகுணமிகு பிராமணனின் கருத்ததுவே!
உபநிடத கருத்தாகும்! இறையியலால் மால்தொடர்பு
மிக்கதுவே! அவதாரம் என்பதுவே சங்கமித்தல்
என்பதாகும்! அதர்மமது பெருகுங்கால் தெய்வந்தான்
நேர்தோன்றி ஸம்பவாமி யுகேயுகேயென துஷ்டநிக்ரஹ
இஷ்டபரிபா லனம்செய்த நிகழ்வுகளே அறிகின்றோம்!
ஆண்டாள்தன் திருமடியில் கண்ணனவன் தலைசாய்த்த
திருக்கோலம் மாமகிழ்வு சேர்த்திடுமே! பூதேவி
பூமாது நிலமடந்தை பற்பலவாம் பெயரினளே
ஆண்டாள்தான்! அன்னவள்தான் நாச்சியாராய் மேலுற்றார்!
தூய்மைமிகு அன்புடையாள்! ஆழ்பக்தி மிக்குடையாள்!
ஆயர்பா டிபிருந்தாவன கோபியளாய் இறைபாதம்
சரணுற்றாள்! எண்ணியதில் திண்ணியளாய் இருந்ததனால்
இலக்கெய்தி மாலிணைவில் மகிழ்ந்தாளே! நாச்சியார்தம்
திருமொழியோ காதல்பா "கீதகோவிந் த"மாகிடுமே!
கேரளத்து நம்பூத்ரி கொண்டையே அன்னவட்கு!
தமிழாண்டாள்! மாலாண்டாள்! வைணவந்தான் ஓங்குகவே!

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# வாழ்வின் அர்த்தம் ஏதோ ஒன்றில்

என்னை முற்றாய்த் தெரியுமென
உங்களுக்குள் ஓர் நம்பிக்கை.
அதற்கு நானும் ம்ம் ம்ம் என்று
தலையாட்டு பொம்மையாய்.

ஆயிரம் வலி சுமந்து புன்னைக்கும் பூ தான் என்னிதழ்
கொட்டித் தீர்க்க கவலைகளிருந்தும்
கனவுக் கதைகளாய் எண்ணிக் கடக்கக்
கற்றுத் தேர்ச்சிப் பெற்று விட்டேன்;
ஆதலால், துயரமொன்றும் எனக்கு பொருட்டில்லை.

வீழ்ந்து கிடக்கும் ஒவ்வொரு இதயங்களையும்
என் வார்த்தைகள் தட்டியெழுப்புவதற்கு
காரணமாய் என் பல அனுபவங்கள்.

அவை போதுமே
பலர் வாழ்வு சிறக்க
முன்னுதாரணமாய் இருப்பதையன்றி
வேறெதனை வேண்டிடப் போகிறது என் மனம்?



கவிஞர் சன்ஹா நிஜாம், புத்தளம்

# வானமுள்ள காலம்வரை வாழ்ந்திருக்கும் உன்குரலும்

## (பின்னணிப்பாடகி உமாரமணன் அவர்களுக்கு அஞ்சலி)

தனித்துவம் வாய்ந்த தன்குரலாலே திரையுலகில்
எண்பதுகளில் இரசிகர்களின் இதயத்தில் இடம்பிடித்தார்!
முப்பத்தைந் தாண்டுகள் இசைப் பயணம்!
ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மேடைக் கச்சேரிகள்!
கல்லூரிப் பருவத்தில் பரிசுகளும் பாராட்டுகளும்
நல்லதொரு குரல்வளத்தால் நாடிவந்தன இவரிடத்தில்!
தொலைக்காட்சி தொகுப்பாளர், மேடைக் கலைஞர்
ரமணனுடன் இணைந்து இசைநிகழ்ச்சிகள் நிகழ்த்தினாரே!
மணவாழ்வில் அவருடன் இணைந்திட்டார் நற்றுணையாய்!
எழுபத்திஆறாம் ஆண்டிலிருந்து பின்னணிப் பாடகியாய்!
நிழல்கள் படத்தில் 'பூங்கதவே தாள்திறவாய்"
தொழிலில் முன்னேறத் துவக்கம் தந்ததுவே!
நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை இசைஞானி
திறமையைக் கண்டுகொண்டு இவருக்கு அளித்தாரே!
சிறந்த பாடல்களாய் அவையனைத்தும் இன்றளவும்
இரசிகர்கள் கொண்டாடும் இசைவிருந்தாய்த் திகழ்கிறதே!
ஆனந்த ராகம் ஒலித்திருக்கும் காலமெலாம்!
பூபாளம் இசைக்கும் உந்தன் குரல்
பூமகளின் ஊர்வலத்தில்! செவ்வந்திப் பூக்களில்
செய்த வீட்டில் வெண்பஞ்சு மேகத்தைக்
கோலமிட அழைத்த குரலில் குழைவு!
மேகங் கருக்கையிலே , கண்மணி நீவரக் காத்திருந்தேன்,
தாகம்எடுக்கிற நேரம்,பொன்மானே கோபம்
ஏனோ?, மஞ்சள்வெயில் மாலையிட்ட பூவே,
ஆகாய வெண்ணிலாவே, நீபாதி,நான்பாதி கண்ணே,
வெள்ளி நிலவே இவையெல்லாம் நம்மிதயத்தைக்
கொள்ளை கொண்ட பாடல்கள்! பூங்காற்றை
இங்கே வந்து பாடென்று அழைத்துவிட்டு
ஏன்பிரிந்து சென்றுவிட்டாய் எங்கள் இளங்குயிலே!
வானுலகில் உந்தன்குரலைக் கேட்டிட யாரழைத்தார்?
என்றென்றும் இரசிகர்களின் இதயத்தில் இடம்பிடித்து
நீங்காத புகழுடனே வாழ்ந்திருப்பாய் இவ்வுலகில்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

## ஹைக்கூ

எச்சில் இலை சோறு
இதமாய் இருக்கிறது
ஏழைச் சிறுவனுக்கு!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# அஃறிணைக் கூட்டம்

விளம்பரங்களை மட்டுமே
நம்பும் கூட்டம்
தன்னை அறிவாளி என
அறிவித்துக் கொள்ளும் முட்டாள்கள்!

விளம்பரங்களுக்குப் பின்னால் இருக்கும்
வியாபாரத்தை அறிபவன்
தனக்கு எதுவுமே தெரியாதென
ஒதுங்கிச் செல்லும் அறிவாளிகள்!

ஊடகப் பொய்களை
ஊரைக் கூட்டி
தம்பட்டம் காட்டி,
விளம்பரம் தேடும்
பெருச்சாளிக் கூட்டம்
கூத்துக்களை பாராட்டும்
ஏமாளிக் கூட்டங்களை
முட்டாள்கள் என்றே
கொண்டாடு!



உழைக்காமலே
மற்றவர் உழைப்பை
தனக்கானது என்று
பேரும் புகழும் தேடும்,
பண்பு இல்லா கூட்டங்களை
எதிர்த்துக் கேட்க திராணியற்ற
முதுகெலும்பு இல்லா மண்புழுக்கள்
சுயமரியாதையை தொலைத்த
மூடர் கூட்டம்!

ஏன், எதற்கு என்று
தன் கண்முன் நடக்கும்
தப்பைக் கூட  தட்டிக் கேட்க
வினாக்களை எழுப்பாத
ஆறறிவின் அறிவைப்
பகுத்துப் பார்த்தாலும்
ஓரறிவு கூட மிச்சம் இல்லாத
அறிவற்ற அஃறிணைக் கூட்டம்!

கவிஞர் திருமதி மோ. கோமளாநேத்ராஜி

# பணமில்லா வாழ்க்கை

"அருள் இல்லார்க்கு
அவ்வுலகம் இல்லையே!
பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லையே!"
***

வாழ்க்கை என்பதோ
ஒரு தேடலென்றால்
பணம் தேடலோ
அதிலோர் அலகே!
***

திருக்குறளும் பிறநூல்களும்
தெளிவூட்டும் ஒருண்மையிது!
பொருளில்லை என்றாலோ
பிணவாழ்வே பூமியிலே!
***

அடுப்படிப் பூனையதும்
அதிகாலையிலே எழும்பிடுமே!
படுக்கையிலே கிடந்தாலோ
பணமென்ன வந்திடுமோ?
***

சோம்பேறிகளாய் வாழ்வதனால்
சோறு யார்தான் தருவாரோ?
சுறுசுறுப்பாய் எறும்புகளாய்
சதாநாளும் உழைப்பதே மேல்!
***

இயந்திரமாய் பிறர் உழைக்க
இரவலனாய் நாம் இருக்கலாமோ?
அயர்ந்து சோர்ந்து இருந்துவிட்டால்
அடுப்பில் நெருப்பு எரிந்திடுமோ?



இமயமாய் விலையேற்றம்
இப்புவியில் எங்குமுண்டே!
இதயம் இமயமானால்
இவ்வாழ்வில் பணத்தோப்பே!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், இலங்கை

# கோடையிலே இளைப்பாறு

கோடையின் கொடையே கடுமை வெயில்
வாடி வதங்கிடுமே பல உயிர்கள்
வெள்ளரியும் நுங்கும் எங்கும் விற்கும்
இளநீரும் மோரும் கைகளில் நிற்கும்
பருத்தி ஆடை அணிந்து செல்வோம்
இயற்கை நிழலில் இளைப்பு ஆறுவோம்
பழைய அமுதம் உணவாய் உண்டிடுவோம்
மேனியில் குளிர்ச்சி நாமே கண்டிடுவோம்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்



நீ பலரோடும் உறவாடுகிறாய்
உறவுகளோடு உரையாடுகிறாய்
மலரோடு பேசியிருக்கிறாயா?
மழையின் சங்கீதம் கேட்டிருக்கிறாயா?

செல்லப் பிராணிகளின் சங்கேத மொழி அறிவாயோ?
அனைத்திற்கும் தலையாட்டு
உன்னுடல் உன்னோடு பேசுவது அறிவாயோ?
மகிழ்ச்சியில் மலர்கிறாய்
பிணியில் துவள்கிறாய்

தீதும் நன்றும் பிறர் தர வாரா
உலகத்துக்கு பொருந்துகிறதோ? இல்லையோ?
உடலுக்கு பொருந்தும் இந்த சொலவடை
உடலை முதலில் ஆராதனை செய்

மிகினும் குறையினும் நோய் செய்யும்
நான்கு பூதங்களை கட்டுக்குள் வை
காய்ச்சலா கவனி! உடல் வலியா கவனி
வீக்கமா கவனி! கடமுடாவா கவனி

உடல் நம்மோடு பேசுவதெல்லாம்?
கவனி கவனி என்கிறது அதனால் கவனி
உடலுக்கு ஓய்வு கொடு
உடலுக்கு உழைக்க கற்றுக் கொடு

உடலை தட்ப வெட்பங்களுக்கு பழக்கு
உணவில்லாமல் இரு
உறக்கம் இல்லாமல் இராதே
மூச்சை உன் கட்டுக்குள் வை

மூச்சை கட்டினால் மனதை கட்டலாம்
எண்ணங்களுக்கு கடிவாளம் போடு
சுகமோ துக்கமோ உடலை தாக்க அனுமதியாதே
அமுதானாலும் ஒரு கவளத்துக்கு மேல் வேண்டாம்

நா காக்க! எவ்வுணவானாலும் நா காக்க
பார்வையை திருடும் உணவை தள்ளி வை
நாசியை துளைக்கும் உணவை தள்ளி வை
உணவை அருந்தும் முன்பே ஆசையை அறு

அடுத்தவர் உணவை பார்க்காதே
உனக்கு ஒவ்வாததை உள்ளே தள்ளாதே
மிகப் பிடித்த உணவை வெறுக்க பழகு
கசப்பையும் சுவைக்க பழகு

வாழ்க்கை இனிக்கும்
உடல் மகிழ்ச்சியில் திளைக்கும்
மனம் பூரிக்கும்
மனித வாழ்வு வலியை அறுக்கும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# எச்சம்

எப்படி
எப்படியோ
வாழ ஆசைப்பட்டு

அப்படியும்
இப்படியுமாய்
வாழ்ந்து

மிச்சமிருக்கும்
வாழ்க்கை
இன்றோ
எச்சமாகிப்
போனது



கவிஞர் யாழினி(எ)ம க, சிதம்பரம்

அத்தியாயம்-4c



அடுத்த காட்சிக்கான ஒத்திகை நடந்து கொண்டிருந்த போது இனிகோவின் அருகில் வந்த கவிதா, "இனிகோ .. உங்க மாமா யாரோ துபாயிலே இருக்கதா சொன்னியே, அவங்களால நம்ம குருவிற்கு ஒரு வேலை வாங்கித்தர முடியுமா?" என்று கேட்டாள்

"கேட்டுப்பார்க்கிறேன். சரி அடுத்த சீன்ல யாரு? அமுதன் வாப்பா" என்றான் இனிகோ

"சார் இந்த நாடகத்துக்கு ஏதோ க்ரீடம் பண்ணச் சொல்லியிருந்தியளாம் ஆள் வந்துருக்கு" என்றான் தாசன்.

வெளியே வந்த இனிகோ, " கிரீடம் நல்லாத்தான் வந்திருக்கு. ஆமாம் வேல், வில்லெல்லாம் பண்ணச்சொல்லியிருந்தோமே என்னாச்சு தம்பி"என்று கேட்டான் இனிகோ.

"சார் இதக்கொண்டு காட்டிட்டு வரச்சொன்னாங்க. மற்றதெல்லாம் எனக்குத் தெரியாது " என்றான் வந்த ஆள்.

"சரி நான் பேசிக்கொள்கிறேன். இதை வச்சிட்டுப் போ" என்றான் இனிகோ.

"இது தான் உனக்கு கடைசி வாய்ப்பு. இந்த. சான்ஸை பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றால் அப்புறம் நீ இந்திய டீமிலே கிரிக்கெட் விளையாடுவதே கடினம் தான்" கபூர் சொல்லிக்கொண்டிருக்க

"நீ.. என்ன தான் சொல்ல வருகிறாய்.." தேவ் கேட்டான்.

"உன்னை எப்படியாவது பெரிய கிரிக்கெட்டராக்கி காட்டுறேன்னு சவால் விட்டிருக்கேன்"

" நான் நல்லாத்தானே விளையாடுகிறேன். " என்றான் தேவ்

"பாரு தேவ். இந்த சென்னை கிளைமேட் உனக்கு ஒத்துப்போகுது ஆனா நீ விளையாடப்போறது .. முதல் மேட்ச் குவைத்திலேங்கிறதை மறந்துடாதே...."


திரு இராஜகைநிலவன்

## அத்தியாயம்-4c

"ஏன் கபூர். பயங்காட்டுற.... " என்றான் தேவ்

"அந்த பாலைவனத்துல எப்படி விளையாடப்போறங்கிறது தான் முக்கியம், அந்த சீதோசண நிலை உனக்கு ஒத்து வரணும்"

"அதல்லாம் கவலைப்படாதே.. நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கிறேன். சீக்கிரம் ஏர்போர்ட்டுக்கு போகணும்" என்றான் தேவ்.



...தொடரும்

திரு இரஜகைநிலவன்

# முகவரி தேடும் காற்று

## புத்தக அனுபவம் (புதினம்)




கவிஞர் இராஜகை நிலவனின், "முகவரிதேடும் காற்று" என்ற புதினத்தின் எழுத்துநடை, கதையின் பாங்கு அருமை. விரசமோ, ஆபாசமோ இல்லாத ஒரு அற்புதமான எழுத்து. ஒவ்வொரு அத்தியாத்தை படிக்கும்போது அடுத்து என்ன நடக்கும் என்ற ஆவலைத் தூண்டுகிறது.

"தமிழரசு தனியாக நிற்க விரும்பி பிடிவாதம் பண்ணியபிறகு, இங்கே பச்சைத் தண்ணீர் குடிப்பது கூட தவறுதான் என்றுபுரியவில்லையா? - ஜே.கே மகனுக்கு உணர்த்த விரும்பினர். அதுவும் சரிதான், இப்போது என்னை தனியாய் என்காலில் நிற்க அனுமதிக்கிறீர்கள்.அப்படிதானே."

தன் காலில் நின்று சம்பாதிக்கத் துடிக்கும் இளைஞன் தமிழரசு கோடீஸ்வரர் ஜே.கே.யின் ஒரேபுதல்வன் தந்தையின் நிழல் தனக்கு வேண்டாம் என்று சுயமாக சம்பாதிக்க துடிக்கும் புதல்வன்தான் தமிழரசு. பணக்கார வட்டத்திலும், நாகரீக சிந்தனைமிக்க இளைஞன் தமிழரசு.

இந்த கணினி யுகத்தில் பல பணக்கார இளைஞர்கள் நமது பண்பாடு, ஒழுக்கம், கலாச்சாரம் என்ன என்பதை மறந்து, மது மாது என்று அலைகின்றவர்கள் மத்தியில் தமிழரசு வியாபார உலகில் ஜெயிக்கவேண்டும் என்று உறுதியோடு செயல்படுகின்றவர். தன் நண்பன் திலக் உதவியுடன் தன் பிஸினஸ் தொடங்குகின்றான்.

"மெய் வருத்தம் பாரார்,பசிநோக்கார்
கண்துஞ்சார்,கருமமேகண்ணாயினர்".

திருமதி. ராணி முத்துராஜ், இலக்கிய சொற்பொழிவாளர்


# முகவரி தேடும் காற்று

## புத்தக அனுபவம் (புதினம்)

என்ற நீதி நெறி விளக்கம் பாடலின் கருத்துக்கு ஏற்ப உத்வேகத்தோடும், முழு மூச்சோடும் தன் பிஸினஸில் இறங்கி வெற்றி கொடிநாட்டினான் தமிழரசு.

தந்தை ஜே.கே தன்மகன் வழிதவறி தப்பான முடிவு எதுவும் எடுத்துவிடக் கூடாது என்று, ஒரு தந்தைக்கே உரியபாசம், பரிதவிப்போடு மகனை கண்காணித்து வந்தார். எத்தனை பெரிய பிஸினஸ் மேனாக இருந்தாலும் ஒரு பொறுப்பான தந்தை ஜே.கே.

இறுதியில் மகன் பிஸினஸ் உலகில் ஜெயித்துவிட்டான் என்று பத்திரிக்கை அவார்டு நடத்தும் நிகழ்ச்சியில் தமிழ்அரசுவின் பொற்றோரை அவனுக்கு அவார்டு கொடுக்கவைக்கும்,அந்த பாராட்டுவிழாவில் தமிழ்அரசுவின் பெற்றோர் மட்டுமல்ல, வாசிக்கின்ற அனைவரின் கண்களிலும் கண்ணீர் வருகின்றது.




"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்"
வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப தமிழரசு பிஸினஸ் உலகில் உயர்ந்து தனது தந்தை ஜே.கேக்கு பெருமையையும், சிறப்பையும் தேடிதந்துள்ளான். தமிழரசு என்ற காற்றுக்கு முகவரி கிடைத்துவிட்டது. இந்தபுதினம் பல இளைஞர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

இரஜகை நிலவனின் எழுத்துப் பணி மென்மேலும் வளர இறைவனின் ஆசியோடு அவரை வாழ்த்துகிறேன்.

*திருமதி. ராணி முத்துராஜ், இலக்கிய சொற்பொழிவாளர்*

## கட்டுரை




தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், 08.01.1901 இல் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் பொன்னுசாமி கிராமணியார் அவர்களின் மகனாகப் பிறந்தார். பொன்னுசாமி கிராமணியாருக்குத் தமிழின் மீதும் தமிழறிஞர்களின் மீதும் இருந்த காதலால் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பெயரைத் தன் மகவுக்கு இட்டார்.

1944ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியராகப் நியமிக்கப்பட்டார். மீண்டும் 1958ல் அப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். அயல்நாட்டுப் பல்கலைக்கழகமான சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1961ல் தமிழ்ப் பேராசிரியராக பொறுப்பேற்றார்.

தமிழக அரசு "கலைமாமணி" விருதையும் மத்திய அரசு "பத்மபூஷண்" விருதையும் தருமபுர ஆதீனம் "பல்கலைச் செல்வர்" விருதையும், குன்றக்குடி ஆதீனம் "பன்மொழிப் புலவர்" விருதையும் அளித்துச் சிறப்பித்தன.

அமெரிக்கா, ஜப்பான், இரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழின் புகழ் பரப்பிய பெருமகனார் தெ.பொ.மீ. யுனெஸ்கோவின் "கூரியர்" என்னும் இதழ்க்குழுவின் தலைவராக விளங்கினார்..

ஆராய்ச்சி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர்தம் நூல்கள் காட்டுகின்றன. திறனாய்வுத் துறையில் பல புதிய தடங்களைப் பதித்தவர்.

திரு அ வில்சன் இதழாசிரியர்


உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை "நாடகக் காப்பியம்" என்றும் "குடிமக்கள் காப்பியம்" என்றும் ஒருவரியில் கூறியவர். சிலப்பதிகாரத்துக்கு இவரைப் போன்று வேறு யாரும் திறனாய்வு எழுதியதில்லை.

விருதுகள், சிறப்புகள்

பல்கலைச் செல்வர் - திருவாடுதுறை ஆதினம்
பன்மொழிப் புலவர் - குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம்
பெருந்தமிழ் மணி - சிவபுரி சன்மார்க்க சபை (முதலமைச்சர் காமராசர் தலைமை)
கலைமாமணி விருது-தமிழக அரசு
சாகித்ய அகாடமி விருது
பத்மபூஷண் விருது

இறப்பு

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் ஆகஸ்ட் 27, 1980 அன்று சென்னையில் புற்றுநோயால் காலமானார்.



நாளை

# நமதே

அடுத்தவரோடு ஒப்பிட்டு
உனை நீ
தாழ்த்திக் கொள்ளாதே
உலகத்தில் சிறந்தது
உனக்கு நீயே.

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com